311

completed verification
[illegible]
16/9/64

311

திரு. ஜே. எல். அனந்தய்யர்,
~~செவ்வாய் பேட்டை~~, கிராசிபுரம்
சேலம்.
"வைத்திய அட்டவணை கட்டு 1 5.

Sir,

Palm leaves returned
to individual on 28-12-63
&
31.1.64.

[illegible]
7.2.64

311

311

தேதி: 30.12.63.
ஓலைச் சுவடியின் பெயர்: "வைத்திய அட்டவணை கட்டு-1"
உரிமையாளரின் பெயர்: ஜே.எல்.அனந்தய்யர்.
இடம்: ~~செவ்வாய்ப்பேட்டை~~, சேலம்.

***

கோடாலுடி மாத்திரை காச்சலுக்கு:-

சுத்தியான நேர்வாளம் ஒரு துட்டெடை மொழுகு ஒரு துட்டெடை கழச்சிக்காய் வறுத்து ஒரு துட்டெடை சாதிலிங்கம் ரெண்டு துட்டெடை யென்னை, வெங்காரம் பொரித்து துட்டெடை.க இந்த வகை 4-ம் கல்வத்திலே போட்டு எலுமிச்சை சாறு விட்டு வகை 4-ம் 4-சாமம் அரைத்து மிளகு போலே மாத்திரை கொண்டு-ஒன்று மணி போலே மாத்திரை கொண்டு இஞ்சி கசாயத்திலே கொடுப்பது. மிளகு கசாயத்திலே கொடுப்பது. கசாயத்திலே கொடுப்பது. சீரகம் கசாயத்திலே கொடுப்பது. குளிர் காச்சல் சன்னி இதுக்கு பத்தியம். அகத்திக் கீரை ஆகாது, நல்லெண்ணை கடுகு, புளி நெய் யிதுகளெல்லாம் ஆகாது. பூத. நசியம் மூக்கிலே போடவும்.

செயிந்த லவணம், வசம்பு, சுக்கு, திப்பிலி, மிளகு காயம் வகைக்கு விராகனிடை ¼ இந்த வகை ஐந்து எடுத்துப் பொடி செய்து வஸ்திர காயம். செய்து வைத்துக் கொள்ளவும். இதுக்குத் தீரும் வியாதி தலைப்பாரம் நின்று போகும். பித்த நீர் இறங்கிப் போகும். பூதங்களும் போகும். பிசாசுகளும் போகும். வெறிகளும் போகும்.

அஸ்தி காச்சலுக்கு கசாயம்:-

~~[illegible]~~ முள் கொழிஞ்சி வேர், சுக்கு இது இரண்டும் ,சமமாய்ப் போட்டுப் பொடி பண்ணி ஒரு படி தண்ணீர் வத்தி அரைப்படி தண்ணீராய்க் காய்ச்சிக். கொண்டு மூன்று பொழுது கொடுத்தால் அஸ்தி காச்சல் போகும். பத்தியம் கரப்பான் சாமான் ஆகாது.

சூலை வாய்வுக்கு பறங்கிப் பட்டை லேகியம்:-

சித்திரமூலம் வேர் ஒரு பலம், பறங்கிப் பட்டை ரெண்டு பலம் ரெண்டு சூரணம் செய்து கொண்டு கோதுமை அரிசி மாவு ஒரு பலம் இந்த மூன்றும் கலந்து கொண்டு இஞ்சி ஒரு சேரு கொண்டு வந்து தண்ணீர் தெளித்து அரைத்து இந்த சாறு ~~11/8~~ 1 1/8 படி எடுத்துக் கொண்டு கொம்பு தேன். 1½ இந்த இரண்டும் ஒரு ஏனத்திலே வார்த்து நாட்டு சர்க்கரை மூன்று பலம் போட்டு லேகியம் செய்து கொண்டு சின்னக் கழச்சிக்காய் போலே உருண்டை செய்து கொண்டு ரெண்டு வேளை சாப்பிடவும். இதுக்குப் பத்தியம் மூன்று நாளைக்கு உப்பு ஆகாது. ஏழு நாளைக்கு புளி ஆகாது. பத்தியம் ஆன பிறகு நெய், தயிர், பால் வெள்ளாட்டு மாமிசம் இது யெல்லாம் யெதேஷ்டமாய் சாப்பிடவும். இதுக்குத் தீரும் வியாதி சூலைக் கட்டு, வாய்வு, கெண்டை வாய்வு, குத்து வாய்வு, மூல வாய்வு, அஸ்தி வாய்வு, ~~[illegible]~~ ரெணம், நெஞ்சு வலி இதுகள் யெல்லாம் போகும்.

வலிப்புகளுக்கு எண்ணை:-

வேப்பெண்ணை ஒரு படி, புதுச் சட்டியிலே எண்ணை வத்தி நல்ல சங்கங் குப்பி வேரு ஒரு பலம் எடுத்து ஆள் செய்து சீலைத் துணியிலே அந்த வேர் வைத்து ~~[illegible]~~ கட்டி அந்த எண்ணையிலே போட்டு மேலே சட்டி மூடி ஐந்து நாழிகை கழிச்சு நெய் பிசுவாய் வரும் போது இறக்கி விடவும். மூன்று நாளைக்கு உப்பு ஆகாது. ஏழு நாளைக்கு புளி ஆகாது.

தீபனத்துக்கு சூரணம்:-

கல்லுப்பு, சியந்த லவண உப்பு, பெருங்காயம், விடாரி வுப்பு அட்டுப்பு, யெவச்சார உப்பு, ஓமம், கடுக்காய், சுக்கு, பெருங்காயம், வாய்விளங்கம், மிளகு, சித்திர மூலம் இந்த வகை 12-க்கு ஒரு துட்டெடை முறைக்கு போட்டுக் கொண்டு சூரணம் செய்து கொண்டு அன்ன தோஷங்களுக்கு ~~[illegible]~~ சோத்திலே கொஞ்சம் அந்த சூரணம் போட்டு பிசைந்து சாப்பிடவும். இந்தப் படிக்கு மூன்று நாள் சாப்பிடவும். துட்டெடை மாத்திரம் அரை மண்டலம் சாப்பிட்டால் தீரும் வியாதி. அரோசிக வாய்வு, சூலை வாய்வு அசீரணம், பாண்டு வியாதி 6 காச்சல் எல்லாந் தீரும். இது எல்லாம் தீரும். இச்சா பத்தியம் சாப்பிடவும்.

பேதி வாந்திக்கு:-

தண்ணீர் தாகம் எடுத்தால் கசாயம்: வீழி வேரு மேல் பட்டை எடுத்துப் போட்டு அந்த வேரும், நெல்லு பொரி செய்து கொண்டு அதிமதுரம், சீரகம், சுக்கு, கோஷ்டம் இந்த வகையெல்லாம் பொடி செய்து இரண்டு படி தண்ணீர் வத்தி அரைப்படி தண்ணீராக காய்ச்சி தேன் விட்டு சாப்பிட்டால் பேதி வாந்தி தண்ணீர் தாகம் இது வெல்லாம் நின்றும் போகும்.

பித்தத்துக்கு லேகம்:-

பருத்திக் கொட்டை இடித்து வைத்துக் கொண்டு நெல்லுப் பொரி செய்து கொண்டு திப்பிலி, யேலரிசி இந்த வகை இரண்டும் வறுத்து கொண்டு நல்லா பொடி பண்ணி வைத்துக் கொண்டு நல்ல தேனை விட்டுக் குழப்பிக் கொடுத்தால் பித்தம்,. நெஞ்சு வலி, வாந்தி, வயற்று வலி இது யெல்லாம் போகும்.

வயத்து வலிக்கு அக்கினி சூரணம்:-

ஓமம் சேர். ½ இந்த ஓமம் தேங்க மயமாய் வறுத்துக் கொண்டு சூரணம் செய்து கொண்டு நாட்டு சர்க்கரை சேர். ½, கல்லுப்பு செயிந்த லவண உப்பு, விடாரி வுப்பு, அட்டுப்பு, வாலில உப்பு, வெடியுப்பு பிந்துப்பு இந்த வகை ஒன்றுக்கு அரை துட்டெடை முறைக்குப் போட்டுக் கொண்டு இந்த வகை யெல்லாம் சூரணம் செய்து முன் சூரணத்திலே

சர்க்கரையிலே இந்த வகையெல்லாம் கூட்டி வைத்துக் கொள்ளவும். தட்டெடை மாத்திரம் இரண்டு வேளை சாப்பிட்டால் இருமல் வியாதி, வயத்து வலி, பித்த குன்மம், வாய்வுச் சுட்டி, சாரை வாய்வு, சாரை குத்தல், இடுப்பு வலி, அசீரணம் இந்த வியாதி யெல்லாந் தீரும். இதுக்குப் பத்தியம் கோழி ஆகாது. பறங்கிக்காய் ஆகாது. நல்லெண்ணை ஆகாது. அகத்திக் கீரை ஆகாது. இந்த வகை நாலும் ஆகாது. இதுக்கு பசு மாட்டு நெய், வெள்ளாட்டு மாமிசம், தயிர், பால் இது யெல்லாம் யெதேஷ்டமாய் சாப்பிடவும். இந்த முறை கை கண்ட முறை.

<u>வயத்து வலிக்கு கசாயம்:-</u>

ஓமம், சீரகம், கல்லுப்பு இந்த வகை மூன்றும் கசாயம் போட்டு கொஞ்சம் போலே இறுத்துக் கொண்டு தேனை விட்டு சாப்பிடவும். வயத்து வலி தீரும்.

<u>குளிர் காச்சலுக்கு பாசான மாத்திரை:-</u>

வெள்ளைப் பாசானம் ஐந்து விராகனெடை எடுத்து பாவக் காயுள்ளே வைத்து சீலை மண் செய்து ஒரு நாழிகை காய வைத்து இரண்டு சின்ன விருட்டியாலே புடம் வைக்கவும். இந்தப் படிக்கு ரெண்டு புடம் வைக்கவும். லவங்கம் விராகனிடை.க, மிளகு விராகனிடை.க, திப்பிலி விராகனிடை.க, தெசாவரம் விராகனிடை.க, சித்தரத்தை விராகனிடை.க கிராம்பு விராகனிடை.க இந்த வகை யெல்லாம் கல்வத்திலே போட்டு பாவக்காய் சாறு வாங்கி இந்த சாறு விட்டு நாலு சாமம் அரைத்துக் கொண்டு மிளகு போலே. மாத்திரை செய்து கொண்டு மிளகுப் போலே மாத்திரை செய்து கொண்டு மிளகு கசாயத்திலே உரைத்துக் கொடுப்பது. சுக்கு கசாயத்திலே கொடுப்பது. சித்தரத்தை கசாயத்திலே கொடுப்பது. சீரகம் கசாயத்திலே கொடுப்பது. கொத்தமல்லிக் கசாயத்தில் கொடுப்பது. கொம்புத் தேன் நெய்யிலே உரைத்துக் கொடுப்பது. பத்தியம் நெய், நல்லெண்ணை, புளி, மாமிசம் அகத்திக் கீரை ஆகாது.

<u>பேதிக்கு என்ணை:-</u>

இதுக்கு வகை விளக்கெண்ணை படி ஒன்று, சதிரக் கள்ளி பழம் வீசம் படி, கள்ளிப் பட்டை சேர் ஒன்று, வெள்ளறுகஞ் சாறு வீசம் படி, கடுகுரோகணி சேர் ஒன்று கடுக்காப் பொடி சேர் அரைக்கால் இந்த வகை யெல்லாம் பொடி செய்து கொண்டு அந்த என்ணையிலே போட்டு பாகமாய்க் காய்ச்சிக் கொண்டு இறுத்துக் கொண்டு ஒரு யேனத்திலே வைத்துக் கொண்டு சின்னக் கரண்டியாலே அந்த என்ணை எடுத்துச் சாப்பிட்டால் பத்து வாட்டி பேதி ஆகும்.

<u>தெரியாமல் சாப்பிட்டால் அதுக்கு கசாயம்:-</u>

கிராம்பு, அதிவிடையம், கோஷ்டம், அக்கிலாக் காரம், வசம்பு, சம்பளம் இந்த வகை கசாயம் சாப்பிட்டால் நின்று போகும்.

<u>எப்படிப் பட்ட காச்சலுக்கும்:-</u>

பாதரசம், நெல்லிக்காய்க் கெந்தகம், வெள்ளைக் காரம், நாபி, மிளகு, சுக்கு, திப்பிலி, கடுக்காய், நெல்லிக்காய், தானிக்காய், தாளகம் இந்த வகை பத்துக்கு வகை ஒன்றுக்கு ஒரு விராகனிடை முறைக்கு போட்டுக் கொண்டு சுத்தி செய்து அரைத்து நேர்வாளம் பத்து விராகனிடை இது யெல்லாம் வடிகொண்டு அரைத்துக் கொண்டு மிளகு போலே மாத்திரை செய்து கொண்டு மிளகு கசாயத்தில் உரைத்துக் கொடுப்பது. சுக்கு கசாயத்திலே கொடுப்பது. சீரகம் கசாயத்திலே கொடுப்பது. இஞ்சிக் கசாயத்திலே கொடுப்பது. தேனிலே கொடுப்பது. இதுக்கு பத்தியம் புளி ஆகாது. நல்லெண்ணை ஆகாது. கடுகு ஆகாது. தீரும் வியாதி காச்சல், சுகசன்னி, குளிர் காச்சல் மூன்று முறைக் காச்சல் இது வெல்லாந் தீரும்.

<u>இருமலுக்கு குபாகுதி மாத்திரை:-</u>

கற்கடக சிங்கி, சீரகம், செவியம், கோஷ்டம்; முத்த காசு, கொத்த மல்லி, முந்திரி பழம், பேரீச்சம் பழம், உத்தாமணி திற்கோலம், லவங்கப் பத்திரி, சுகநீறு, திப்பிலி, சந்தனக் கட்டை, பேய்ப்புடல், தாளிசபத்திரி; கண்டங்கத்திரி, முக்காவேளை, நெல்லிக்காய்ப் பருப்பு, நெல்லுப் பொரி இது வகை ஒன்றுக்கு ரெண்டு தட்டெடை முறைக்குப் போட்டு வறுத்துக் கொண்டு சூரணம் செய்து கொண்டு (சூரணம் இது நாலு சாமம்) நாட்டு சர்க்கரை சேர்த்துக் கொண்டு தட்டு மாத்திரம் ரெண்டு வேளை சாப்பிட்டால் எப்படி பட்ட இருமலும் போகும். இதுக்கு பத்தியம் மூனு நாளைக்கு புளி ஆகாது.

<u>வாய்வுகளுக்கு மாத்திரை:-</u>

சயிந்த லவணம், யெவச்சாரம், திரிகடுகும், பவழ பற்பம், ஓமம், கற்கடக சாய், பெருங்காயம், இந்த வகை ஒன்று ரெண்டு தட்டெடை போட்டு சூரணம் செய்து கொண்டு ராவில் புடம் வைக்கவும். கறுப்பு வெற்றிலை வாட்டிச் சாறு வாங்கி அந்த சூரணத்திலே விட்டு அரைத்துக் குண்டு மணி போலே உருண்டை செய்து கொண்டு நிழலிலே உலர வைத்து சுக்கு கசாயத்திலே உரைத்துக் கொடுப்பது. யிஞ்சி கசாயத்திலே உரைத்துக் கொடுப்பது. இதுக்குத் தீரும் வியாதி சாரை வாய்வு, குத்து வாய்வு, கெண்டை வாய்வு, அண்ட வாய்வு, மூல வாய்வு, சகலமான வாய்வு களும் போகும். இதுக்கு இச்சா பத்தியம்.

பாண்டுவுக்கு மருந்து :-

கழச்சிக் காய்ப் பருப்பு எடுத்துக் கொண்டு பாவக்காய் சாறு விட்டு அரைத்து கழச்சிக்காய் போலே உருண்டை செய்து மூன்று நாளைக்கு ரெண்டு வேளை சாப்பிடவும். இதுக்கு பத்தியம் ஏழு நாளைக்கு உப்பு, புளி ஆகாது. பாண்டு போகும்.

பேதிக்கு உருண்டை :-

சுத்தி செய்த நேர்வாளம் ஒரு துட்டெடை மிளகு, ரெண்டு துட்டெடை இந்த ரெண்டும் கல்வத்திலே போட்டு எலுமிச்சம் பழச் சாறு விட்டு நாலு சாமம் அரைத்துக் கொண்டு சுண்டைக்காய் போலே உருண்டை செய்து கொண்டு குண்டு மணி போலே உருண்டை செய்து மிளகு போலே உருண்டை செய்து கொண்டு சுக்கு, கசாயத்திலே உரைத்துக் கொடுப்பது. பேதிக்கும் தயிரும், சோறும் சாப்பிட்டால் நின்று போகும்.

பழவரைக் கட்டிக்கு : ரச கற்பூரம் மருந்து :

ரச கற்பூரம் பத்து விராகனெடை கொண்டு வந்து நல்ல சங்கங் குப்பி பழம் கொண்டு வந்து சாறு வாங்கிக் கொண்டு அந்த ரச கற்பூரம் ஒரு யேனத்திலே வைத்து அந்த பழச் சாறு விட்டு நாலு சாமம் சுருக்கு கொடுத்துக் கொண்டு முன் பழச் சாறு விட்டு நாலு சாமம் அரைத்துக் கொண்டு சுண்டைக்காய் போலே உருண்டை செய்து குண்டு மணி போலே உருண்டை செய்து மிளகு போலே உருண்டை செய்து கொண்டு விளக்கெண்ணெயிலே ஒரு உருண்டை உரைத்துக் கொடுப்பது. கடினமாய் பத்தியம் ஏழு நாளைக்கு எப் பேர்ப் பட்ட பழவரைக் கட்டியும் போகும்.

சூலைக் கட்டுக்கு கசாயம் :-

தழுதிழை வேர், நாற சங்கங் குப்பி வேர், நல்ல சங்கங் குப்பி வேர் இந்த வகை ஒன்றுக்கு சேர் அரை முறைக்குப் போட்டுக் கொண்டு மிளகு மூன்று துட்டெடை, சீரகம் ஒரு துட்டெடை இந்த வகை யெல்லாம் பொடி செய்து கொண்டு ஒரு யேனத்திலே போட்டு எட்டு படி தண்ணீர் வைத்து ஒரு படியாய்க் காய்ச்சிக் கொண்டு இந்தக் கசாயம் அரைக்கால் படி எடுத்துக் கொண்டு பறங்கிப் பட்டை அரை துட்டெடை சூரணம் செய்து இந்த சூரணம் அந்தக் கசாயத்திலே போட்டுச் சாப்பிடவும். இந்தப் படிக்கு நாள் ஒன்றுக்கு ரெண்டு வேளை சாப்பிடவும். இந்தப் படி மூன்று நாளைக்குச் சாப்பிடவும். இதுக்கு பத்தியம் ஏழு நாளைக்கு புளி ஆகாது. இதுக்குத் தீரும் வியாதி சூலைக் கட்டு, சூலை வாய்வு, சாரை வாய்வு, குத்து வாய்வு, கெண்டை வாய்வு இது யெல்லாம் போகும்.

மேக சூட்டுக்கு அமுர்தாதி சஞ்சீவி என்னை :-

சிந்தாமணிக் கொட்டை ஐந்து படி கொட்டை கொண்டு வந்து பானையிலே போட்டு இளநீர் ரெண்டு படி ஆவாரங் கொழுந்து தழை, கம்பஞ் சோற்றுத் தண்ணீர் இந்த மூன்றும் அந்த பானையிலே போட்டு வேக வைத்து நிழலிலே உலர வைத்து இடித்து பானையிலே போட்டு இந்தப் பானையிலே கம்பம் சோற்றுத் தண்ணீர் இளநீர் அரைபடி பொன்னாங்காணிச் சாறு அரைபடி கரிசிலாங் கண்ணி சாறு அரைப்படி, வல்லாரைத் தழைச் சாறு அரைப்படி கீழாநெல்லித் தழைச் சாறு அரைப்படி ஆவரம் பட்டை நாலு சேர், பட்டை பானையிலே போட்டு பச்சைத் தண்ணீர் நாலுபடி தண்ணீர் ஊத்தி அரைப்படி தண்ணீராய்க் காய்ச்சிக் கொண்டு அந்த பானையிலே இந்த தண்ணீர் ஊத்தி அடுப்பு மேலே வைத்து கிளறி விட்டு நல்லாய் காய்ச்சி என்னை ஊத்தவும். இந்த என்னையிலே குங்குமப்பூவு ஒரு விராகனெடை நல்லாப் பொடி செய்து அந்த என்னையிலே போடவும். நாள் ஒன்றுக்கு சுட்டெடை மாத்திரம் கொண்டு வேளைக்குச் சாப்பிடவும். தீரும் வியாதி மேக சூடு கற்பசூடு, அஸ்தி சூடு மூலசூடு வெள்ளை விழுந்தால் ரெத்தம் விழுந்தால், சீய் விழுந்தால் இது யெல்லாம் போகும். இதுக்கு இச்சா பத்தியமாய்ச் சாப்பிடவும்.

சன்னிக்கு மாத்திரை கண்ணுக்குக் கலிக்கம் போடவும் :-

பெருங்காயம் விராகனிடை. உ, சயிந்த லவணம் விராகனிடை. உ, திப்பிலி விராகனிடை. உ, இந்த திப்பிலி வறுத்துக் கொண்டு இந்த மூன்றும் போட்டு பசு மாட்டு நெய் விட்டு நாலு சாமம் அரைத்துக் கொண்டு மாத்திரை செய்து கொண்டு முருங்கத் தழை சாற்றிலேயாவது வெத்திலைச் சாற்றிலேயாவது மோருலே பாலிலே யாவது உரைத்து கண்ணிலே கலிக்கம் போடவும். சன்னி போகும். வெளிசுக்கும் ஆகும். தலைவலி போகும். பித்தம் இறங்கும். ஒரு கலிக்கம் போட்டால் (வீசருபாய் வாங்கவும்).

பெரிய பஞ்ச சூரணம் :-

பெரிய மரம் பருத்தி தழை கொண்டு வந்து உலர வைத்து சூரணம் செய்து இந்த சூரணம் சேர் ஒன்று நாட்டு சர்க்கரை சேர் அரை இந்த இரண்டும கலந்து கொண்டு ரெண்டு வேளையும் துட்டெடை சாப்பிடவும். இந்தப் படிக்கு ஒரு மண்டலம் சாப்பிட்டால் நாடியில்லாதே யிருந்தால் நாடி உண்டாகும். விந்து விடாது. சரீரம் கெட்டி ஆகும். காயம் சித்தி நல்ல படிக்கு ஆகும். இந்த சூரணம் சேர் ஒன்றுக்கு ரெண்டு ரூபாய் வாங்கிக் கொள்ளவும்.

பூசனிக்காய் லேகியம் : உடம்பு சூட்டுகளுக்கு :-

மிளகு பலம் ஒன்று, சாதிக்காய் பலம் ஒன்று, சீரகம் பலம் ஒன்றரை, சாபத்திரி பலம் ஒன்று, ஏலஅரிசி பலம் ஒன்று, கிராம்பு பலம் ஒன்று, திப்பிலி பலம் ஒன்று, தெசாவரம் ஒன்று ஓமம் பலம் ரெண்டு, பூநீறு பலம் ஒன்று, வெட்டி வேர் பலம் ஒன்று, தேத்தாங் கொட்டை பலம் ஒன்று, கசகசா பலம் ரெண்டு, சன்ன லவங்கப் பட்டை பல

ஒன்று, லவங்கப் பத்திரி பலம் ஒன்று, சுக்கு பலம் ஒன்று, சித்தரத்தை பலம் ஒன்று, கொத்தமல்லி பலம் ஒன்று இந்த வகைகளைக் கொண்டு வந்து பொடி செய்து கொண்டு நெறமா வாத்துக் கொண்டு அரைத்து வஸ்திர காயம் செய்து கொண்டு சாம்பல் பூசனிக்காய் கொண்டு வந்து கறளை கறளையாய் அரத்து இடிச்சு இந்த சாறு படி ஒன்று பசு மாட்டுப் பாலு படி முக்கால் இது இரண்டும் ஒரு யேனத்திலே ஊத்தி அரைப் படியாய்க் காய்ச்சிக் கொண்டு இதிலே கொம்புத் தேன் கால்படி, பசு மாட்டு நெய் காலே அரைக்கால் படி இந்த இரண்டும் ஊத்தி இதிலே நாட்டு சர்க்கரை சேர் ஒன்றே கால் இந்த சர்க்கரை போட்டு பாகு போலே காய்ச்சிக் கொண்டு முன சூரணம் யெடுத்து இதிலே போட்டு லேகம் செயது கொண்டு சின்ன கழச்சிக்காய் போலே உருண்டை செய்து கொண்டு ரெண்டு வேளை சாப்பிட்டால் தீரும் வியாதி அஸ்திக் காச்சல், மூலச் சூடு, மூல வாய்வு, கை கால் குடைச்சல், இடுப்பு வலி, நெஞ்சு வலி, மந்த காசம் இருமல், தலைவலி, ரெத்தக் கடுப்பு, சோபைகளும் இந்த லேகம் ஒரு ஜீ மண்டலம் சாப்பிட்டால் சகலமான வியாதிகளும் தீரும். கை கண்ட முறை.

<u>மேக ஊறலுக்கு மேகத்துக்கு எண்ணெ:-</u>

சோத்துக் கத்தாழை கொண்டு வந்து இடித்து ஒரு யேனத்திலே போட்டு இதிலே கடுக்காய் பொடி செய்து போட்டால் சாறு வாங்கி கரு வேலங் காய் கொண்டு வந்து இடித்து சாறு வராது. அந்த சோத்துக் கத்தாழை சாறு விட்டு மசித்து ஐந்து நாழிகையின் பிறகு சாறு வாங்கிக் கொண்டு இந்த சாறு ஒன்றரை படி செங்கழனிக்காய் பூவு தழை இந்த வகை மூன்றும் கொண்டு வந்து தண்ணீர் தெளித்து இடித்து வெள்ளருகு சமூலம் கொண்டு வந்து இடித்த சாறு முக்கால் படி மனத்தக்காளிச் சாறு முக்கால் படி, கொன்றை தழை கொண்டு வந்து இடித்து இந்த சாறு முக்கால் படி ஈர வெங்காயம் சாறு ஒரு படி இந்த வகை யெல்லாம் யேனத்திலே விட்டு இதிலே விளக்கெண்ணெ ரெண்டு படி கூட்டி அடுப்பு மேல் வைத்து மெழுகு பதமாகக் காய்ச்சிக் கொண்டு இறக்கிக் கொண்டு ரச கற்பூரம் ரெண்டு விராகனிடை கல்வத்திலே வைத்து அந்த எண்ணெ விட்டு ஐந்து நாழிகை அரைத்து எடுத்து அந்த எண்ணெ விட்டு கலக்கி விட்டு பேதிக்கு வாங்கிக் கொள்ளவும். இரண்டு வேளை காசிடை மாத்திரம் நித்தம் சாப்பிட்டால் தீரும் வியாதி கருங் குஷ்டம், வெள்ளை குஷ்டம், நச மேகம் போகும். பத்தியம் மூன்று நாளைக்கு உப்பு ஆகாது. நெய் பால் யெதேஷ்டமாய் சாப்பிடவும்.

<u>விந்து விடாது விந்து கட்டும்:-</u>

சாதிக்காய் ஒன்று, கிராம்பு, வால்மிளகு இந்த மூன்றும் பொடி செய்து கொண்டு முதிர்ந்த முருங்கை மரம் வேரு பறித்து அந்த வேர் துளை செய்து அந்த வகை மூன்றும் அதுக்குள்ளே வைத்து அந்த வாய் மூடி சீலை மண் செய்து போட்டு பத்து நாள் ஆன பிறகு எடுத்துக் கொண்டு இதை எடுத்து மிளகு போலே, சாதிக்காய் சாப்பிட்டால் ஒரு சாமம் விந்து விடாது. சுண்டைக்காய் போலே சாப்பிட்டால் விந்து விடும்: ஸ்ரீ

<u>எலி கடிக்கு மருந்து:-</u>

சித்தரத்தை கட்டெடை ஓமம் கட்டெடை சுக்கு கட்டெடை இந்த மூன்று வகை கொண்டு வந்து கல்வத்திலே போட்டு முருங்கைப் பட்டை சாறு விட்டு அரைத்து இலந்தைக் காய் போலே மூன்று உருண்டை செய்து மூன்று நாள் சாப்பிடவும். முன் வகையை கசாயம் வைத்து மூன்று நாள் சாப்பிடவும். ஏழு நாளைக்கு புளி ஆகாது. எலி கடி விஷம் போகும்.

<u>மேகத்துக்கு எண்ணெ: இதுக்கு வகை:-</u>

களச்சித் தழை, செம்முள்ளி சுடு தொறட்டி சங்கங் குப்பி, நொச்சி வேர், கண்டங்கத்திரி, நிலப்பனை அமுரி படி.க, புன்னைக்கு தாழை விழுது, ஆவரங் கொழுந்து, கரிசிலாங் கண்ணி, விளாங் கொழுந்து, ஈர வெங்காயம், கடைச் சரக்கு அதிமதுரம், முதுதக் காசு, சாதிக்காய், கிராம்பு, கோஷ்டம், கோரோசனை, சுக்கு, வெந்தயம், கார்போகரிசி, விளாவரி, மரமஞ்சள், சீரகம் மிளகு, சித்தரத்தை, நேர்வாளம் கொட்டை விராகனிடை.6, கசகசா, வாய்விளங் கம், கொத்தமல்லி காமபூ, சித்தா மணக்கு வேர் வகை ஒன்றுக்கு ரெண்டு பலம் முறைக்கு போட்டு பொடி செய்து கொண்டு கடை செலவு வகை ஒன்றுக்கு அரைப் பலம் முறைக்குப் போட்டுப் பொடி செய்து கொண்டு விளக்கெண்ணெ இரண்டு படி ஒரு யேனத்திலே வைத்து இதிலே இளநீர் அரைப்படி வார்த்து அந்த வகை யெல்லாம் போட்டு மெழுகு பதமாக காய்ச்சிக் கொண்டு பேதிக்கு வாங்கிக் கொள்ளவும். புளி ஆகாது.

-*-*-*-*-

முற்றும்

ஃ- ஃ-ஃ-ஃ

க.ச:31.12.63.

தேதி: 3.1.1963.
ஓலைச் சுவடியின் பெயர்: "கை முறை வைத்தியம் நஞ்சு முறிவு நூல் கட்டு-5."
உரிமையாளரின் பெயர்: ஜே.எல்.அனந்தய்யர்.
இடம்: ~~செவ்வாய்பேட்டை~~. சேலம்.

***

இதன் கண் மருந்துகள் மட்டும் எழுதப்பட்டன.

பாம்பு விஷத்துக்கு மருந்து:-

மாவிலிங்க மரத்துச் சிராயை எலுமிச்சங் காயளவு அரைத்து புழுங்கலரிசியில் பால் சோருக்கி உண்ணக் கடிச்ச பாம்பு சாகும். இந்த மருந்து முக்காலாக்கித் தின்னவும்.

நாள் மருந்து:-

வட்டத் திருப்பி வேர், சீந்திக் கொடி, பெருகா மிட்டி யிலை, பெருங் குறிஞ்சா வேர், பேய்ப்பீர்க்கங் கூடு ஆடு தின்னாப் பாளைக் கிழங்கு, பேய்ப்புடலை வேர் கண்டு இந்த மருந்தெல்லாம் கொண்டு வந்து உரலில் தவைத்து நாள் பண்ணிக் கொண்டு எந்தப் பாம்பு கடித்தாலும் காடியில் அரைத்துக் கொடுக்க எடுக்கு மீண்டு இந்தப்படி கொடுக்கவும். மாவிலிங்கை வேர், புளியம் பிறண்டை, நல்ல பிறண்டை, காட்டுக் கறணை கார்த்திகை கிழங்கு இது வெல்லாம் அரைத்து மோருடன் குடிக்கவும்.

பாம்புக்குத் நாள் மருந்து:-

பேய்ப்பீர்க்கு, சமூலம் உலத்தி நாள் பண்ணி நல்லெண்ணெயில் குடிக்க விஷம் மீளும்.

வெள்ளை வெங்காயம், வசம்பு, பெருங்காயம், சிறு நீரிலரைத்து உச்சிக்குத் தேய்க்கவம். நாசி காது வாயிலும் வார்க்கவும். கீழா நெல்லி வேர் சமூலம் அரைத்து நல்லெண்ணெயில் குடிக்க விஷந் தீரும்.

குப்பை மேனியிலையை அரைத்துக் காடியில் குடிக்க எல்லா விஷமுந் தீரும். நல்ல முசுட்டை எலுமிச்சங் காயளவு அரைத்து தண்ணீரில் குடிக்க விஷந் தீரும். நாய்ப் பாகல் வேர் சிறு நீரிலரைத்துக் குடிக்க விஷ மீளும். குதிரை வாலி வேர் அரைத்து வெந்நீரில் குடிக்க விஷந் தீரும்.

பாம்புக்கு அஞ்சனம்:-

சாட்டறணை சுத்தி வரக் குளி பறித்து பதினைந்து நாள் ஒன்னுக்கு இருந்த அந்த வேரைப் பிடுங்கி வந்து வெள்ளாட்டுக் கோமியத்தில் மூன்று நாளுறப் போட்டு எடுத்து பத்து மிளகும் உப்பும் கூடப் போட்டு அரைத்து அஞ்சனமிடவும்.

மூஞ்சூறு பிச்சு அஞ்சு பச்சைப் பாம்பு பிச்சு அஞ்சு மிளகு அன்பது பெருங்காயம் ஐந்து, நேர்வாளம் களஞ்சு, திப்பிலி களஞ்சு, திப்பிலி மூலம் ஐந்து, இந்த மருந்தெல்லாம் எலுமிச்சம் பழச் சாறு விட்டு அரைத்து உருண்டை பண்ணி நிழலுலத்தி வைத்துக் கொண்டு சிறு நீரிலாவதுதல் எலுமிச்சம் பழச் சாறுதல் உரைத்து அஞ்சன மிடவும். மிளகு உப்புக கூடப் போட்டு அரைத்து உருண்டை செய்து வைத்துக் கொண்டு சிறு நீரிலுரைத்து அஞ்சனமிடவும். புங்கம் விரை, விளாவிரை, பேய்ப்பீர்க்கம் விரை, எலுமிச்சம் விரை, மிளகு, நத்தம் தரிசு, நேர்வாளம், தன்னி லொக்க நிறுத்துக் கொண்டு எலுமிச்சம் பழச்சாறு, பேய்ப்பீர்க்கஞ் சாறு வார்த்து அரைத்து வேப்பம் விரைப் பிரமாணம் குளிகை செய்த விஷந் தீண்டினால் உரைத்துக் கண்ணிலிட விஷந் தீரும்.

வெற்றிலைச் சாறு, குப்பை மேனிச் சாறு, துளசிச் சாறு இந்த மூன்றுந் ச்சு தனிச் சாறுகப் பிழிந்து கொண்டு யிரதம் களஞ்சி மதிச்சுக் கொண்டு நிழலுலத்தி யாகக் கொண்டு உருண்டை செய்து விஷந் தீண்டினால் தலையிலே கீறிக் கட்டவும். விஷந் தீரும். இது கை கண்டது. பாம்பு கடித்த தலை மண்டைக் கொண்டால் அதிரம் போட்டு அதின் மேலோ விட்டு துளசிச் சாறு விட்டு மத்திச்சால் விஷ மீளும். விஷந் தீண்டினால் பழுபாகல் கிழங்கு வாயிலடக்கி யிரு காதவளி போகலாம். அவரைச் சாறு கொடுக்க மீளும். இலுப்பைப் புண்ணைக்கு மிளகு பேய்ப்பீர்க்கிச் சாத்தி லரைத்து உருண்டை பண்ணி நிழலுலத்தி முலைப்பாலில் உரைத்துக் கண்ணிலிடவும். மீறினால் சிறு நீரிலுரைத்து நசியமிடவும். கருங் கோழிக்கு கார்நெல்லு மேய்ச்சு சிறுநீர் குடிப்பித்து எச்சமிட்ட பிறகு எடுத்து நீர் சுவற விட்டு அம்மியிலரைத்து உருண்டை பண்ணிக் கண்ணிலிட மீளும். அமுக்கிலா வேர் நொச்சிக் கொழுந்து வேப்பங் கொழுந்து இது மூன்று சமன் கொண்டு நிழலில் உலத்தி பொடியாக்கி அன்றாடம் ஒரு வெருகடிப் பிரமாணம் நல்லெண்ணெயில் வேக வைத்துக் கொள்ளவும்.

விரியன் கடிக்கு மருந்து:-

மலைதாங்கி வேரும் இலையும் இள வெந்நீரில் குடிக்கவும். வாகை வேரும் இலையும் வெந்நீரில் குடிக்கவும். முக்கிரட்டை வேர் அரைத்து சுண்டைக்காய் மருவாதி தின்று மேலும் பூசவும். மலை தாங்கி வேரும் இலையும் விழுதி வேர், பிறண்டை வேர், சீந்தி தண்டு யிலையும் தனித் தனியே இள வெந்நீரில் குடிக்கவும். உடம்பு வீங்கினால் விழுதியிலையை வேக வைத்து கடைந்து உடம்புக்குப் பதி வீக்கத்திலும் கட்ட வீக்கம் வாங்கும். நிலக் குமிள் வேர், சிலந்திக் கூடு அமுக்கிலாம் நாதவளை வேர் கடி வாயில் பூசவும், பூனிக் கருணைக் கிழங்கு சதிரக் கள்ளிப் பாலூட்டி உலத்தி வைத்துக் கொண்டு கள்ளிப் பால் வார்த்து அரைத்து உருண்டை பண்ணி இள வெந்நீரிலரைத்துக் கடி வாயிலிடவும், உள்ளுக்குங் கொடுக்கவும். காஞ்சொறி வேரும் இலையும் நரிப் பயத்தம் வேரும் இலையும் சீந்திக் கொடியும் இந்த மூன்றும் அரைத்துச் சிறு நீருடன் கொடுக்கவும். தேத்தான் வேர் நரி விளா வேர் எண்ணை வார்த்து அரைத்துக் காத்தாலே கொள்ளவும். குனியம் மீளும்.

விரியன் கடிக்கு நசியம்:-

முக்காடன் செவியும் தும்பையும் ஒருக் கட்டைப் பருவசம்பு நறுக்கிச் சிறு

நீருடன் ஊற வைத்து நசியம் பண்ணவும். காட்டு முருங்கைப் பட்டை பலம்.க, அளிஞ்சித் தழை ஒரு பிடி, சங்கங் குப்பை, குப்பை மேனி, வசம்பு, வெள்ளைப் பூண்டு சிறுநீர் விட்டு மத்திச்சு நசியம் பண்ணவும். உப்பு, புளி தவிர்க்கவும்: முட் காவளை வேரும் மிளகறை யிலையும் நரிப் பயத்த மிலையும் சத்தாளைச் சாறு கோழி முட்டை வார்த்து அரைத்துக் கட்டவும்.

விரியனுக்கு வாய் மருந்து:-

மிளகு கருக் கொட்டிப் பருப்பும் வறுத்துத் தின்னவும். விஷந் தீரும். கடப்பம் விரையும் களக் கொட்டிப் பருப்பும் பாக்குடன் தின்னவும். குணமாம். வேப்ப முத்தும் உள்ளி, வசம்பும், மிளகு, இந்த ஐந்து மருந்தும் சரி சமன் கூட்டி அரைத்து உருண்டை பண்ணி வெந்நீர் வேண்டின் பெருக்கு நீரில் நசியம் விடவும். அல்லது சிறுநீரில் உரைத்துக் கொதிக்க வைத்து இடவும். அல்லது இள வெந்நீரில் குடிக்கவும். பொருமி வேரும் விருமி வேரும் அரைத்து இள வெந்நீரில் குடிக்கவும். தலை மண்டை சொன்ட விஷந் தீரும். புங்க மரத்தைத் துளைத்து அதிலே கொட்டை வாங்கின புளியை அடைத்து வருஷம் சென்ற பின்பு புளியை எடுத்து உருண்டை பண்ணி நிழலில் உலத்தி வைத்துக் கொண்டு ஒரு உருண்டையை நல்லெண்ணெயில் குடிக்கவும்.

விஷத்துக்கு:-

எட்டிப்பட்டை, எருக்கம் பட்டை, நீலி வேரு மணத்தக்காளிச் சாறு விட்டு அரைத்து சின்ன சுண்டைக் காயளவு உருண்டை செய்து வெந்நீரில் குடிக்கச் சகல விஷமும் போகும். விஷபாகம் போகும்.

பூச்சு மருந்து சுவளைக்கு:-

சீந்திக் கிழங்கு பால் வார்த்து அரைத்து சுவளையிடவும். தைய்யாந்தகரையிலை பொடுதலை கஞ்சாரங் கோரை அவரை யிலை, வேளையிலை, முருங்கையிலை பிறண்டைத் தண்டு, விளாவிலை மணத்தக்காளி யிலை இது அவைத்து தவளை யிடவும்.

என்லை பண்ண:-

மாடப் புரு வெச்சம் வவ்வால் விட்டை வெரில்லாக் கொத்தான் இவை நல்லெண்ணெயிலாக்கி யிடவும்.

பல விஷத்துக்கு:-

இலவங் சிராய், அப்பைக் கிழங்கு அள் பண்ணி வைத்துக் கொண்டு இள வெந்நீரில் குடிக்கவும். அழிஞ்சி விரையும் பேய்ப் பீக்கம் விரையும் கழுதை எலும்பும் முயல் எலும்பும் இவை யெல்லாம் கூட்டி தயில மிறக்கி வைத்துக் கொண்டு இந்தத் தயிலம் வசம்பு கூட்டி உரைத்து ஒருக் கொட்டைப் பூடு மிளகு கூட்டி நருக்கி நசியம் பண்ணவும்.

கழுதைத் தும்பை வேரும் வெற்றிலையும் நருக்கி சிறுநீரில் நசியம் விடவும்.

பல விஷத்துக்கு:-

நல்ல பீர்க்கம் விரை அரைத்து இள வெந்நீரில் குடிக்கவும். இறங்கத் தடவவும். மாதளம் விரை அரைத்துப் பாலுடன் குடிக்கவும். வெள்ளைக் காக்கணம் வேர் பாக்கு வெத்திலையிடன் தின்னவும்.

தளசியரா வேரும் ஒரு கொட்டை பூண்டும் வசம்புங் கூட்டி காடி வாத்தரைத்துக் கொடுக்கவும். மேலும் பூசவும். வீக்கில் பொறிசல் பட்டை வேரை அரைத்து நல்லெண்ணெயில் வேக வைத்து பூச வீக்கம் போம்.

நாகப் பாம்புக்கு:-

எருக்கம் பாலும் கருப்புக் கட்டியும் தின்னவும். நீர்ப் பூலாம் வேரும் பொன்னாங் கன்னி வேரும் சீதேவி செங்கழு நீர் வேரும் சுக்கு, வசம்பு, வெள் வெங்காயம் இவை அரைத்துக் கொடுக்கவும்.

மூக்கை பாம்புக்கு:-

வக்கலைக்கு திங்களில் காப்புக் கட்டி செவ்வாயில் பலி கொடுத்து வேர் பிடுங்கிக் குளிச மாடி இது கையிலிட்டு இறங்கத் தடவித் தண்ணீரில் போட்டுக் குடிக்கவும்.

சுருட்டை சாலுங்கி மூக்கழகுக்கு:-

சுள்ளி வேரும், சுண்ட வேரும் அரைத்து இள வெந்நீரில் குடிக்கவும். நொச்சியிலை சாறைக்கும் சிறு நீருடன் குடிக்கவும்.

கடி வாய்க்கு மருந்து:- கோழி ஈரல் வாங்கிக் கடிவாயில் வைத்துக் கட்டவும்.

பாம்புக்கு எல்லா மருந்து:-

முத்தின தேங்காய்த் தண்ணீர் விட்டு அரைத்து வைத்துக் கொண்டு தேங்காத் தொட்டியை அரைத்து கலந்து பெர்ட்டணங் கட்டி சிறுகப் பிழிந்து நேர்வாளப் பருப்பு இரண்டு விராகனிடை பருப்பும் இரசங் குன்றி அளி அளவு கூட்ப் போட்டு குளிசங் கல்லில் அரைத்து இப்படி இரசமும் நேர்வாளம் பருப்பும் எட்டு விராகன் பத்து விராகன் கூட்டி அரைத்து சிமிளிலடைத்து நல்லெண்ணெ தீண்டாமல் வைத்திருந்து விஷந் தீண்டிருல் எள்ளு மருவாகி நாக்கில் தடவிக் கடிவாயில் இந்த மருந்து இடும் போது சீவன் இருக்கிறதுக்கு அடையாளம் தலை மயிரைக் கையிலே பிடுங்கி பார்க்க வராதிருந்

நடுத் தலையில் வளையுடைத்துக் கீறிக் கை மடிப்பிலுங் கீறிக் தடவவும். இது கை கண்டது. இந்த மருந்து எட்டி அலரி ஒடு சோளப் பயிர் விரியன் கடி எலி கடி மசை நாய் கடி நரி கடி வண்டு கடி, கட்டம் இந்த வகைக் கெல்லாம் கருப்புட்டியில் வைத்து வைத்து விழுங்கவும். கள்ளி வேர் ரெண்டு உகாய் வேர் ரெண்டு நீர் வாத்தரைத்து பூசவும். கெருடன் கிழங்கும் சிறு குறிசா வேர்ப் பட்டை விழும்பி வேர் அழிஞ்சி வேர் கொன்றைப் பட்டை பொரிசல் பட்டை இடித்துச் சூரணம் பண்ணி வெந்நீரில் கொடுக்கவும். உதிர மண்டல கடிக்கும் வாயில் ரெத்த மெடுக்கும். மயிர்க் கால் ரெத்தம் பாயும். உடனே விழுவான். இதக்கு சங்கங் குப்பி வேர், நில உகாய் வேர், வேளை வேர், சிறுகீரை வேர், மல்லிகை வேர், குப்பை மேனி இந்த ஆறு மருந்தும் சமமாக இடித்துச் சூரணம் பண்ணி வெருகடிப் பிரமாணம் கொள்ளவும்.

பாம்புக்கு குளிகை:-

எட்டிப் பட்டை பலம்.உ, எட்டித் தழை எலுமிச்சங் காயளவு கொழுந்த ~~எலுமிச்~~ எலுமிச்சங் காயளவு ஒடுவம் பட்டை பலம்.உ, தழை எலுமிச்சங் காய் அளவு கொழுந்து அந்தப் பிரமாணம் அலரிப் பட்டை பலம்.உ தழையும் கொழுந்தும் எலுமிச்சங் காயளவு ஆடு தின்னாப் பாளை பலம்.க, மருக்காரைப் பட்டை பலம்.க, கோட்டு மருக்காரை பலம்.க, ~~மருக்காரைப் பட்டை பலம்.க~~, வஞ்சல் பட்டை பலம்.க, குடப்பாலைப் பட்டை பலம்.க, பொரிசல் பட்டை பலம்.க, நஞ்சுண்டான் பட்டை பலம்.க, வெள்ளருகு சமூலம் பலம்.க, சங்கங்குப்பிப் பட்டை பலம்.க, புங்கம் பட்டை பலம். க, சுண்டைப்பட்டை பலம்.க, கொளிஞ்சிப் பட்டை பலம்.க, அப்பைக் கிழங்கு பலம்.க, கெருடன் கிழங்கு பலம்.க, சிரிப்பட்டை பலம்.க, சிலந்திக் கொடி பலம். க, சீந்திக் கொடி பலம்.க, சிறுகுறிஞ்சாப் பட்டை பலம்.க, பெருங்குறிஞ்சாப் பட்டை பலம்.க, குப்பை மேனிப் பட்டை பலம்.க, அமுக்கிலாங்கிழங்கு பலம்.க, காளைப் பட்டை பலம்.க, தேத்தான் பட்டை பலம்.க, விழுதிப் பட்டை பலம்.க, இது வெல்லாம் நிழலுலத்தி நாள் செய்து நாளில் எருக்கம் பாலும் நல்லெண்ணெயும் விட்டு அரைத்து தினம் பயறு மாத்திரம் அரை மண்டலம் கொள்ளவும். கடித்த பாம்பு சாகும். கொன்ற விடத்தில் நிற்கும். மயக்கங் கொடுக்கவும். மோருஞ் சோறும் கூட்டவும். கத்தரிக் காய் பூசனிக்காய் கிரந்திப் பண்டமாகாது.

நல்ல பாம்புக்கு நசியம்:-

வெற்றிலை, உப்பு, மிளகு, சிறுநீரில் கூட்டி நசியம் விடவும். எருக்கம் பாலு தும்பைத் தழையும் உள்ளி வசம்பும் கூட்டி நசியம் விடவும். கை கண்டது. குப்பை மேனி வேளை சிறுதும்பை நொச்சி இந்த நாலு இலையும் இலுப்பைப் புண்ணாக்கும் சிறு நீரில் கூட்டி சீலையில் கட்டி முடிக்கிப் பிழிந்து செவியிலும் கண்ணிலும் கண்ணிலும் மூக்கிலும் விட விஷம் மீளும், பேய்ப் பீர்க்கந் தழையை நசுக்கி நாசியில் விடவும். பேய்ப் பீர்க்கம் வேரை வாயில் போட்டுக் கொள்ளவும்.

பேய்ப் பீர்க்கங்காய் ஒரு கூடை காயை அறுத்து நிழலுணர்த்தாக உலத்தி உலக்கைச் சத்தம் கேளா விடத்தில் போய் கிளைகளை பிடுங்கிப் போட்டு விரையை ஒதுக்கிப் போட்டுத் நாளை மயிலிட்டுக் கொண்டு உள்ளங் கையில் நக்கவும். வரிக் குமட்டிக்கு கிரணத்தன்று காப்புக் கட்டி வேர் செடி காய் சமூலமும் பொடி பண்ணி அந்தத் நாளை விழந் தீண்டி மயக்கமானால் ரெண்டு நாசியிலும் மூக்கிலும் குழல் வைத்து ஊத விஷம் மீளும்.

பாம்புக்கு அஞ்சனம்:-

புழுங்கலரிசியும் மிளகும் உரைத்துக் கண்ணிலிடவும். முடக் கொத்தான் இலையும் நசுக்கி அஞ்சனமிடவும். கடிக்கு வாயில் நிற்கும். காணக் கடி கடித்தாலும் விஷந் தீண்டினும் மூலைப் பாலில் நசியமிடவும். சிறு பாம்பு கடிக்கு காணக் கடிக்கு பொரிசல் பட்டை வேர் பட்டை அரைத்து இள வெந்நீரில் உள்ளுக்குக் கொண்டு கடி வாயிலும் பூசவும். காணக் கடிக்கு முதலைப் பூண்டு தழை கம்பரிசியில் களிக் கிண்டி தின்னவும்.

பாம்புக்கு:-

களச்சிக்காய் வேர் அமாவாசை நாள் செருக்கி உலரப் போட்டு வைத்துக் கொண்டு சிறு நீரிலாவது இள வெந்நீரிலாவது அரைத்துக் கொடுக்கவும். ஆடு தின்னாப் பாளை வெந்நீரில் கொடுக்கவும்.

விஷத்துக்கு சுடுகாடு மீட்டான் என்கிற குளிகை:-

கீரி சர்ப்பத்தை கடித்துப் போய் பச்சை செடியில் பிரண்டு அந்தத் தழை யைப் பிடுங்கித் தின்று வந்தால் கீரிக்கு விஷமில்லை. அந்த செடிக்குப் பேர் கீழா நெல்லி அந்தத் தழையும் அதின் காய் அமாவாசை நாள் இறங்கு பொழுது அந்தி நேரம் வாய் பேசாமல் பறித்து வந்து நல்லெண்ணெயாவது உமி நீராவது குத்தி அரைத்து மிளகு மருவாதி நாற்பது நாறு குளிகை செய்து நிழலில் மூன்று நாளும் உலத்தி பின்பு அந்தி வெய்யிலில் உலத்திப் பேய்ச் சுரைக்குடுக்கையில் அடைத்து அமாவாசைக்கு எடுத்து மூன்று நாளும் உலத்தி விஷம் தீண்டினால் நாசப் பாம்பு விரியன் தீண்டினால் மூன்று உருண்டை உரைத்து உள்ளே கொள்ளவும். இரண்டு உருண்டை அவளை யிடவும். மற்றப் பாம்பு கடித்தால் இரண்டு உருண்டை இடவும். விஷத்துக்கு இதுவே குளிகை. இது கை கண்ட பலன். ~~வீட்டில் பாம்பு, தேள், பெருச்சாளி எலி மூட்டை கொசு, குருவி [illegible] [illegible]~~

வீட்டில் பாம்பு, தேள், பெருச்சாளி எலி முட்டை கொக்கு, குருவி போக மருந்து :-

வேளை சமூலமும் கருங் குங்கிலியம், செங்கொட்டை, சோரைக் கிழங்கு நொச்சி யிலை இவை சமன் கூட்டி வீட்டில் தூப மிட வீட்டிலிராது.

விரியன் கடிக்குக் குளிகை :-

புளிக் கருணைக் கிழங்கு சதிரக் கள்ளிப் பாலாட்டி உலத்தி வைத்துக் கொண்டு கள்ளிப் பால் வார்த்தரைத்து உருண்டை பண்ணி இள வெந்நீரிலுரைத்துக் கடி வாயிலிடவும். உள்ளுக்குக் கொடுக்கவும்.

ஓடிக் குளிகை : சிவராயன் குளிகை :-

நொச்சிக் கொழுந்து பேய்க் குமட்டிக் கொழுந்து சாட்டறணைக் கொழுந்து நிலக் கடம்பு சமூலமும் ஊமத்தங் கொழுந்து சுண்டைக் கொழுந்து கையாந்தகரைக் கொழுந்து சிறு நாகத்தி விடத் தேரை கொழுந்து. வேப்பங் கொழுந்து. வேலிப் பருத்தி வேலிப் பருத்தி யிலை, பொரிசல் கொழுந்து இந்தப் பனிரெண்டு மருந்தும் ஒவ்வொன்றும் இரண்டு பிடியாகக் கொண்டு கூட்டிக் கண்டச் சீரக்கு பெருங்காயம் கருஞ்சீரகம் இந்துப்பு வெள்ளை வெங்காயம் கம்பிளி சுட்ட சாம்பல் இவையும் ஒவ்வொன்றும் கால் காசிடை கூட்டிப் புதிது தண்ணீர் வார்த்து அரைத்து உருண்டை பண்ணி நிழலிலுலர்த்தி பதனம் பண்ணி வைத்துக் கொண்டு பில்லி சூனியம் தாக்கினால் ஒரு உருண்டை வெந்நீரில் குடிக்கவும்.

வேறு குளிகை :-

பெருங்காயம், களஞ்சு.உ, ஓமம், சுக்கு, மிளகு, கடுகு, வெள்ளை வெங்காயம், தும்பருஉண்டம், வெரிச்சிலாம் பட்டை, பூதாள சக்கையாவது, உப்பாவது சூனிய சுரத்தாணி இது ஒவ்வொன்றுக்கு களஞ்சி கூட்டவும். வசம்பு களஞ்சி ½ பேய்ப் பீர்க்கு ஒரு பிடி விரும்பிக் கொழுந்து ஒரு பிடி, நொச்சிக் கொழுந்து ஒரு பிடி, உசாய்க் கொழுந்து ஒரு பிடி, பட மடக்கி ஒரு பிடி பேய் மிரட்டி ஒரு பிடி, சாட்டறணைக் கொழுந்து ஒரு பிடி, பறத் தாரங் கொழுந்து ஒரு பிடி, ஆலாங் கொழுந்து ஒரு பிடி இது வெல்லப கருந் கழுதை லத்திச் சாத்தில் அரைத்து குளிகை செய்து சூனிய குணத்துக்கு இள வெந்நீரில் குடிக்கவும். ~~சுக்கு~~.

தும்மி செட்டி குளிகை :-

சூனிய சுரத்தாணி பட மடக்கி மலைதாங்கி வேர், கை பிரம்பு பட்டை கல்கோவை சம்பை கோவைக் கிழங்கு அமுக்கிலாங் கிழங்கு, நெட்டைப் பேய் மிரட்டி வேர், எழு முள்ளு வேர் பட்டை, பூதா சக்கை அரைத்து நிதனம் நிலம்பூளி வேர், சீக நெல்லிப் பட்டை விடத் தேரங் கொழுந்து நகுண்டாள் கொழுந்து அலிஞ்சிக் கொழுந்து ஊசி நாகத்திக் கொழுந்து ஆகப் பதினேழு கொழுந்து வகையும் கூட்டிப் பெருங்காயம் நாலு விராகனிடை எலுமிச்சம் பழச் சாறு விட்டு அரைத்து அந்த மருந்து இடித்து நாள் பண்ணிக் கொழுந்து வகையும் கூட்டி இடித்து வட்டப் பேய் மிரட்டி தழை அவைத்துச் சாறு வார்த்து அரைத்துப் பெருங்காயம் கூட அரைத்து துவரைப் பிரமாணம் குளிகை செய்து வைத்துக் கொண்டு சூனிய குணமானால் இள வெந்நீரில் குடிக்கவும். சயித்தியம் சுரம், சுக சன்னிக்கு சயித்தியம், வாய்வு இதுக்கெல்லாம் ஆகும்.

உத்திர மணிக் குளிகை :-

குப்பை மேனி நாய்ப் பாகல் நத்தைச் சாட்டறணை ஊமத்தை முடக் கொத் தான் விரும்பி கண்டில் இது ஒன்பது வகையும் பறித்து வந்து புளியஞ்சிராய் கொண்டு வந்து செங்கல் குழி பண்ணி புளியஞ் சிராய் குழியில் போட்டு எரிய விட்டு தனலான பின் செங்கல் குழியிலே ஒரு கோழி முட்டையை உடைத்து மஞ்சு மொட்டு பிறம்பாய் என்னை மொட்டை அதில் ஒலிக்கி சாத்தி விட்டுத் ஆளாலி குதிகாலை மத்தியிலிட்டு அதுக்கு பிற்பாடு வெந்தை யிப்போடே யிருந்து இறங்கத் தடவவும் போம்.- நிசம்.

கெருடக் கிழங்கு மாத மொருக்கால் முழுகித் தவளையிட்டு திலதமிட்டு உடம்புக்குத் தவளையிட்டுக் குளிசப் போடவும். சென்முருவி வேர், சிறுபூளை வேர், குதிரை வாலி வேர், சேப்பு நெருஞ்சி கீரா நெல்லி வேர், சிறு குறிஞ்சா வேர் மலைதாங்கி வேர் அப்பைக் கிழங்கு வேர், கிளிமூக்கு கிழங்கு அதளைக் கிழங்கு எறங்கு சங்கி விரை சோமநாதப் பட்டை, பெருங்காயம் இவை யெல்லாம் அரைத்துக் குளிகை பண்ணிக் கொண்டு வெந்நீரில் குடிக்கவும். இதுக்கு யெல்லாம் பல்லி சூனியம் தீரும்.

எல்லாப் பில்லி சூனியத்துக்கும் :-

மூன்று வகையாய் குண்டிகை யிடித்து நொந்தால் தவசி முருங்கை யிலை அரைத்து தலை வெண்ணெயில் முழுங்கவும். அன்பாடு மேலேற வாங்கிறல் தவசி முருங்கை வேரை அரைத்து வெள் வெங்காயம் வசம்பு, பெருங்காயம் கூட்டி அரைத்து இள வெந்நீரில் குடிக்கவும். ஊன் பாட்டை நொந்து பேச்சில்லாமல் இருந் தாலும் மனம் திடுக்கிட்டு இருந்தாலும் வயறு பொருமினாலும் உடம்பு இறுகாமெ நிந்த உடம்பு மூடிலும் வெண்ணை திரட்டிப் பூண்டு அரைத்து வெண்ணெயும் கூட்டி முழுங்கவும்.

விக்கல் பொரி சூனியத்துக்கு :-

குன்மங் குருகி எப்பமிட்டு இருந்தாலும் வில்லுப் போலே வாங்கி யிருந்தாலும்

வயறு பலவிதமாக நொந்து உடம்பு காச்சல் வந்தாலும் குளிர் வந்தாலும் அடிக்கடி பயந்தாலும் கண் சிவந்தாலும் இதக்கு மருந்து.

எட்டிப் பட்டை அளிஞ்சிப் பட்டை, மிளகறணைப் பட்டை, எரு முள்ளைப் பட்டை, வசம்பு, வெள்வெங்காயம், பெருங்காயம் கூட்டி அரைத்து இள வென்னீரில் கலக்கி உள்ளுக்கு கொடுத்து மேலும் திமிரிடவும். வட்டப் பேய் மிரட்டி நெட்டைப் பேய் மிரட்டி உத்தாமணி, கருஊமத்தை, முடக் கொத்தான் சோம நாதப் பெருங்காயம், ஆனை வசம்பு, ஒருக் கொட்டைப் பூண்டு புழு சுண்ணம்பு இது வெல்லாம் துவைத்து மூன்று நாள் துவ ளையிடவும்.

சகல சூனியத்துக்கும் :-

நாய் செத்த விட்டதே மண் நனைந்தது எடுத்து வந்து எண்ணெயில் கொதிப்பித்து காதிலும் விட்டு மேலுந் துவளையிடவும்.

மண்டை பில்லிக்கு :-

கள்ளி மேலே புல்லுருவி வேர் காதில் பிளியவும்.

மூடங்கு சூனியத்துக்கு :-

சென்ன கரிவேரை அரைத்து பசுவின் வெண்ணெயில் முழுங்கவும். உடம்பெங்குந் திமிரிடவும்.

மண்டை பில்லிக்கு :-

கொளிஞ்சி சமூலங் கொண்டு வந்து ஊலிவித்து பசுவின் மோரில் பிசைந்து கோதை வடித்துப் போட்டு உலை கட்டிக் குருவை அரிசியில் உய்யாக்கிக் தின்னவும். இதில் பசுவின் நெய் வார்த்து அசனம் பண்ணவும்.

சூனியம் திமிருக்கு :-

அரலி வேர் சந்தனமாக அரைத்துப் பூசவும். சங்க வேர் அரைத்துப் பாலில் குடிக்கவும். சூளி தாமரை வேரை அரைத்து பசுவின் வெண்ணெயில் முழுங்கவும். சாரெள்ளு இலவம் பிசின், குதிரைக் குளம்பும் அரைத்துக் குடிக்க எரிப்பரி சூனிய மீரும்.

கோவைத் தண்டை துவைத்துப் பிழிந்து கொண்டு பூசணிக்காய் குடலை வாங்கிப் பிழிந்து கொண்டு சல்ல வெல்லம் போட்டுக் கொடுக்கவும்.

விலங்கு போட்ட சூனியத்துக்கு :-

வெடியுப்பும், யிடி விழுந்த மர நஞ்சுக்கி (கிடைஞ்சியிலையை) விழுது அரைத்து சாலடி தண்ணீரில் கரைத்து மேலெங்கும் பூச சூனி பறியும். விலங்கு தெறிக்கும்.

பில்லி பேய் செத்து விழ :-

பேய்த் தும்பைச் சாறு உழக்கு, வெண்ணொச்சி சாறு உழக்கு, பெருங்காயம் இரு களஞ்சி அரைத்துக் கொடுக்கவும்.

புகை மருந்து :-

எருமைக் கொம்பு வெள்ளாட்டுக் கொம்பு மயிர் புகை காட்டவும்.

ஏவல் கட்டு சூனியத்துக்கு ஆளி முதரிக்க துவளையிட மருந்து :-

விளாம் பட்டையும் தழையும், கிளுவைப் பட்டையுந் தழையும், மண்டித் தழையும் கோவைக் கிழங்கு தழையும் அளிஞ்சித் தழையும், பேய் மிரட்டித் தழையும், துளசித் தழையும், செங்கத்தாரி வேர், விழும்பி வேர், குப்பை மேனித் தழையும், அமுக்கிலாந் தழையும் வேரும், ஒருக் கொட்டைப் பூடு வெள்ள வெங்காயம் வசம்பு, கூட்டித் துவைத்து துவளையிடவும். பொட்டணங் கட்டி முகந்து கொள்ளவும். இதின் குணம் யிடுக்கு கீள் கால் கை யரிச்சுக் கிடக்கும். தண்ணீர் குடித்தால் தித்திக்கும்.

சூனியத்துக்கு மருந்து :-

அளிஞ்சி வேர்ப் பட்டை கொருந்து சங்கு வேர்ப் பட்டை கொமந்து, பொன்னங் கண்ணி சமூலங் கொண்டு வந்து இடித்துக் காடியில் பிசைந்து ஒரு படி காடித் தண்ணீரில் போட்டு ஊற விட்டு பக்கா நாள் எடுத்துக் கொண்டு பனைவெல்லம் போட்டுக் குடிக்க வேணும். பிழிந்த தழையை எடுத்து துவளை யிடவும். கை கால் யெல்லாம் சூனியம் மீரும். ~~சூனியத்தில் வெள்~~

சூனியத்தில் வொள்ளொடி நீரொட்டி :-

மலஞ் சுண்டை வேர் அரைத்து நல்லெண்ணெயில் கொதிப்பித்து ஒரு காசிடை உள்ளுக்கு கொடுத்து அந்தத் தழையை மேலெங்குந் திமிரிட சூனியம் மீரும். புலியொடி

ஒலவொடி நாய் போலே வருகிறதுக்கு :-

பறத்தேற யிலை சின்னி யிலை, குருவை யரிசியிலே டித்து களிக் கிண்டி தின்ன சூனியம் முறியும். நீரில் நிற்கிற நீர்ப் பூலா வேரை அரைத்துக் காராட்டுப் பாலில் கொடுத்து மேலுந் திமிரியிட சூனிய முறியும்.

வெள்ளொடி நீரொடிக்கு :-

அப்பைக் கோவைக் கிழங்கு சோம நாதப் பெருங்காயம், ஒரு உள்ளி, வசம்பு, கூட்டி அரைத்து உள்ளுக்குக் கொடுத்து மேலுந் திமிரிட வெள்ளொட்டி தீரும்.

<u>நீரடிக்கு:-</u>

கருஞ்சீரகம், ஏலமும் அரைத்து உள்ளுக்குக் கொடுத்து புங்கம் பட்டை நிலக் கடம்பு, வெள்ளை ஆவாரையிலை, வசம்பு ஒரு உள்ளி கூட்டி அரைத்து மேலெங்குந் தலை யிடத் தீரும்.

<u>ஏவலொடிக்கு:-</u>

முக்குருந்தம் பட்டை தாழை வேர் மூன்று வகையுந் தவத்த இள வென்னீரில் பிசைந்து ஒரு சேரை கொடுக்கவும். <u>நாய் போலே வருகிறதுக்கு:-</u>

நாய்ப் பாகலிலை தவைத்த மேலுக்குந் திமிரிடவும். கொத்தான் இலை யை அரைத்து வெல்லங் கூட்டி பசுவின் வெண்ணெயில் முழுங்கவும்.

<u>ஏவல் பில்லிக்கு:-</u>

கோளிக்காலிலை சமூலமும் அரைத்து வெல்லங் கூட்டி பசுவின் வெண்ணெயில் முழுங்கவும்.

<u>கருணுயி போலே பூனை போலே வருகிறதுக்கு:-</u>

கருங் குன்டுமணி வேருந் தழையு மரைத்து நல்ல வெல்லங் கூட்டிப் பசுவின் வெண்ணெயில் முழுங்கவும். வயசு வகிறுல் வசனைக் கிழங்கு அரைத்துக் காடியில் கொடுக் கவும். முசுட்டை வேரரைத்துக் காடியில் கொடுக்கவும். அவிஞ்சி வக்கனை கற்கொளிஞ்சி யிவை வேரும் இலையும் அரைத்து காடியில் பிசைந்து தலைனையிட சூனிய மீரும். சந்தனம் அரைத்து மேலெங்குந் தலையிட சூனியந் தீரும்.

<u>ஓடி சூனியத்துக்கு:-</u>

வசம்பு, வெள்ளை உள்ளி, உத்தாமனி, சிறிய தக்காளி ரசம் பரவு முட்கா வேளையிலை நன்றாய் நிசம் பெறவே கடுகு அரைத்துக் கசக்கி மூக்கில் பிடிக்க ஓடி சூனியம் போமுடைந்து. ஆருக்காக்

<u>ஒரு கால் பிடிப்பு திமிறு முடைச்சல் சூனியத்துக்கு தலைனை:-</u>

சீந்திக் கொடியுடனே சித்தா முட்டித் தழையும் சாந்து பிறச் செய்து நீ தண்ணி தனில் பேர்ந்து மிகக் கை கால் தலையிடக் சடு முடக்குச் சூனியமும் அய்ய மில்லை ஓடிப் போமன்று,

<u>சூனிய மீள்க்க:-</u>

மருக்காரை வேர் வெட்டி எடுத்து கண்டங் கண்டமாக நருக்கி வைத்துக் கொன்டு சந்தனம் போலே அரைத்து வென்னீரில் சாறு கொடுத்து மேலுந் தலை யிட எந்தச் சூனியமும் தீரும். முசுளைப் பூண்டு சமூலமும் தவைத்து திமிடத் தீரும். பேய் அத்தி வேர் அரைத்து தலையிடத் தீரும். சிறு நத்தி யிலை, விழுதி யிலை, வேலிப் பருத்தி யிலை தவைத்து சிறுநீரில் அரைத்துக் காலெங்குந் தலை யிடவும். தீரும். பேய் அத்திக் கொழுந்து அரைத்து தலை யிடத் தீரும். [மேல் வருவன வெல்லாம் மந்திரமும் யந்திரங்களும் ஆனதால் பிரதி செய்யாமல் விடப்பட்டன.

****

முற்றும்

****

சு.ச: 3.1.1964.

This manuscript
consists of Visha vaidyam
Completed verification
Sundaram
15/9/64

311